30TH அக்டோபர் 2003

# தமிழா நீ யார்

தமிழரின் கடந்தகால வரலாற்றையும் அன்று அவர்கள் பின்பற்றிய குணங்கள், வல்லமைகள், பழக்கவழக்கங்கள் இவற்றை ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்கும் போதுதான் தமிழரின் உண்மையான சிறப்புகள் தெரியவரும்.

தமிழர் தன்னையும் தன் பாரம்பரியத்தையும் பற்றி முழுமையாக அறியாமல் உள்ளனர். இவர்கள் குணங்கள், இவர் வாழ்க்கைமுறை, இவரின் தனிச்சிறப்புக்கள் பற்றியும் அறியும் போது தான் தமிழர் வாழையடி வாழையாக தான் அறியாமலே பின்பற்றும் பாரம்பரிய சிறப்புக்களை அறிய முடியும்.

தமிழர் தன் நிலை அறியாத காரணத்தால் தன் மொழி மீதான பற்றும் அதன் வளர்ச்சியில் ஆர்வமும் இல்லாமலும் இருக்கின்றனர்.

தமிழரின் உயர் குணங்கள் என்று பார்க்கும் போது 100% நேர்மை மற்றும் ஒழுக்கம் கடை பிடிக்க நினைப்பவர்கள் என்று அறியலாம்.

சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோவடிகள் மூத்தவனுக்கு பட்டம் சூட்டாமல் இளையவனான தனக்கு பட்டம் சூட்ட மற்றவர்கள் நினைக்க தான் மறுத்து சன்னியாசம் சென்று விடுகிறார். இது வழக்கத்திற்கு மாறுபட்டு பின்னாளில் அரசர்கள் முடிசூட்டும்போது சகோதரர்களிடையே பூசல் வரகூடாது என்பதற்காகவே.

ஐரோப்பியர் 500 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிற்கு கடல் மார்க்கமாக வழி தேடிக்கொண்டிருக்க தமிழரின் மூதாதையர்கள் 2000 வருடங்களுக்கு முன்பே கிரேக்கம் ரோமானியம் நாடுகளில் கடல் கடந்து சென்று வாணிபம் செய்துள்ளனர். இன்றும் மத்தியதரைக்கடல் நாடுகள், இந்தியாவின் கிழக்கு மாநிலங்களிலும் தமிழரின் மரபினர் வாழ்கின்றனர்.

2000 வருடங்களுக்கு முன்பு உலக வரலாறு எழுதிய ஹிராட்டடசு என்பவர் தற்போதைய இஸ்ரேல் நாட்டில் இருக்கும் பழைய 'தீரு' எனும் துறைமுக ஊரில் பினிசியர்கள் என்ற பெயரில் தமிழர்கள் வந்து குடியேறியதாகவும் அவர்கள் அப்போது நடந்த கிரேக்க போரில் சிறப்பாக செயல் பட்டதாகவும் எழுதியுள்ளார். போரில் சிறப்பாக ஈடுபடுபவரே அரசர் ஆவர் என்பது அன்று இயல்பு.

இந்தியாவில் 2000 ஆண்டுகளுக்கு முன்பு அரசவாழ்வை துறந்து மக்கள் நல்வாழ்விற்காக துறவு பூண்ட புத்தர், மகாவீரர் வாழ்ந்த காலகட்டங்களில் தான் இயேசு கிறிஸ்துவும் வாழ்ந்தார் என்பது கவனிக்கபட வேண்டியது.

© ARCHIES LTD.